எல்லாம் செயல் கூடும்

# தீப நெறி

தீபம் 7 ஒளி 12 தமிழ் மாத இதழ் விலை ₹1 ஜுலை 2017

பட்டினியில்லா...
நோயில்லா...
குற்றமில்லா...

வளமிக்க
வையகத்தை
வார்த்தெடுப்போம்!



அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெலாம்
இருள்நெறி யென எனக்கு இயம்பிய சிவமே!


எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க !
வள்ளல் மலரடி வாழ்க!! வாழ்க !!!

## வாயார வாழ்த்துகின்றோம்...




நித்ய தீப தருமச்சாலையில் 02.07.2017 அன்று திருமண நாளை கொண்டாடிய தீபம் அறக்கட்டளையின் காப்பாளர்
தயவு. எஸ். மாதவன் தம்பதியினரை தீபம் வாயார வாழ்த்துகின்றது.


## " தீபநெறி " ஆசிரியர் குழு



**கே.என். உமாபதி**
ஆசிரியர் – தீபநெறி இதழ்
கே.கே. நகர்
கைபேசி : 95518 49757



அன்பின் பிடியுள்
**அர. இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
தொலைபேசி :04172 273293
கைபேசி : 80564 38488



வள்ளலார் சிற்றடியேன்
**குருபக்கிரிசாமி**
ஆசிரியர் – அருட்சுடர்
வடலூர்
94428 12844



**மு. பாலகிருஷ்ணன்**
தணிக்கை & வெளியீட்டாளர்
தீபநெறி இதழ்
கைபேசி : 94440 73635

# உண்மை விளங்கினால் இன்பம்

"மனாதிகள் பொருந்தா வானடுவானாய் அனாதி உண்மையதாய் அமர்ந்த மெய்ப்பொருளே" என அகவல் வரி 897/898ல் வள்ளலார் எழுதுகிறார். காலங்காலமாய் காயம் என்பது பொய், உலகம் என்பது மாயை, உயிர்கள் என்பது அநித்தியம் என சொல்லித் திரிந்த சமுதாயத்திற்கு - எல்லாமே மெய் - எல்லாமே ஏதோ ஒரு செயல்பாட்டிற்காகவே படைக்கப்பட்டது. எனவே காலத்தை விரயம் செய்யாது அந்த மெய்ப்பொருளினை அறிந்து, உணர்ந்து அடைய வாருங்கள் என அழைத்தவர் வள்ளலார். அந்த வகையிலே மேற்சொன்ன அகவல் வரி எப்படியெனில்,

வான்நடு வானாய் அனாதி உண்மை

சலிப்பு என்பதோ சளைப்பு என்பதோ இல்லாமல் காருண்ய சிந்தையுடன் ஆன்மநேயத்தை உயர்த்திப் பிடித்து ஆன்ற சன்மார்க்கம் அணி பெற வேண்டி விரதமிருக்கும் சான்றோர்கள் தினமும் தங்கள் வழிபாட்டை நிறைவு செய்ய ஒரு பாடலைப் பாடுவர். அதன் முதல் இரண்டு வரிகள் இதோ :

ஜோதி ஜோதி ஜோதி சுயம் ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள் ஜோதி ஜோதி ஜோதி சிவம்

இது எதைக் குறித்து பாடப்படுகிறது? இதற்கும் மேற்சொன்ன அகவல் வரிகள் 897/898க்கும் என்ன தொடர்பு? எனில்

ஜோதி, ஜோதி, ஜோதி, சுயம்

ஜோதி - 1 என்பது நட்சத்திரங்கள் ஜோதி-2 என்பது - வால் நட்சத்திரங்கள் (COMET) ஜோதி - 3 என்பது - சூரியன். இவை சுயமாகத் தோன்றின.

அதனால் எனக்கென்ன? எனில்

நட்சத்திரங்கள் : சூரியனை விட பல மடங்கு பெரிதான, பல நூறு கோடி மைல் தொலைவில் பல நட்சத்திரங்கள் உள்ளன. இவற்றிற்கும் நமக்கும் தொடர்புகள் உண்டு. உதாரணமாக துருவ நட்சத்திரம் என ஒன்று உள்ளது. இதை மையமாக வைத்து தான் வடதுருவம் என்ற ஒன்றை நாம் பயன்பாட்டில் வைத்துள்ளோம். ஒரு காந்தத் துண்டை எடுத்து நூலில் கட்டி தொங்கவிட்டால் அது வடதுருவம் நோக்கி நிற்கும். நாம் வணங்கும் சூரியன் உள்ள திசையிலெல்லாம் அது திரும்பாது. தினமும் பறக்கும் ஆயிரக்கணக்கான விமானங்களும், மிதக்கும் கப்பல்களும் பயணிப்பது இந்த துருவம் காட்டும் வழியில்தான்! பூமி சுற்றுவதும் அந்த காந்த சக்தியால்தான்! - பூமியின் அட்சரேகையில் ஆதிக்கம் செய்வது 27 நட்சத்திரங்கள் தான். அதில் ஒன்றான பூச நட்சத்திரம் தை மாதத்தில் நிறைமதியன்று சூரியனும், சந்திரனும், வடலூரும் நேர்க்கோட்டில் வரும் நேரத்தில்தான் தைப்பூச ஜோதி தரிசனம் காட்டப்படுகிறது. இதைப் போல பூமியின் தீர்க்க ரேகையின் தொடர்பு கொண்ட 60 நட்சத்திரங்களை தமிழில் 60 ஆண்டுகளின் பெயர்களாக வைத்தனர். (வேற்று மொழிகளில் ஆண்டுகட்கு பெயரில்லை - வரிசை எண்கள் மட்டுமே இருக்கும்), இந்த அறுபது நட்சத்திரங்களின் அருகில் அண்டத்தில் பல கருந்துளைகள்

உள்ளன. பூமி சுழன்று வரும் தருணத்தில் – அந்த ஆண்டு நட்சத்திரத்தின் அருகில் பூமியின் மேற்பரப்பு வரும்போது அந்தக் கருந்துளைகளின் தாக்கத்தால் பேரிடர்கள் வரக் காரணமாகிறது. (சுனாமி, பூகம்பம், வறட்சி, வெள்ளம், புயல் போன்றவை) எனவே தமிழ் ஆண்டுகளில் உதாரணமாக இப்போது நடைபெறும் ஹேவிளம்பி ஆண்டில் - 60 ஆண்டுகட்கு முன்பு இதே ஹேவிளம்பியில் எவையெல்லாம் பதிவானதோ அவை இந்த ஆண்டிலும் பதிவாகும்.

இந்த 27+60=87 நட்சத்திரங்கள் நமது பயன்பாட்டில் இருந்தாலும், அண்மையில் விண்வெளி ஆராய்ச்சியில் ஒரு நட்சத்திரக் கூட்டம் நமது பூமியை எப்படி எல்லாம் ஆட வைக்கிறது என்பதை பல கேசட்டுகளில் பதிவு செய்து – இந்தப் புதிர்களை கண்டறிய இன்னும் பத்து ஆண்டுகள் ஆகும் என சென்ற மாதத்தில் செய்தி வெளியிட்டனர். அந்த நட்சத்திரக் கூட்டத்திற்கு என்ன பெயர் தெரியுமா? M-87 (நமக்குதான் 27+60 இது ஏற்கனவே தெரியுமே), இருப்பினும் என்ன சொல்கிறார்கள் என பார்ப்போம். மெய்ப்பொருளைக் காணட்டும்! நட்சத்திரங்களைப் பற்றி இப்படி பல நூறு செய்திகளை சொல்ல இடமில்லை என்பதால் இத்துடன் நிறுத்திவிட்டு

ஜோதி (2) வால் நட்சத்திரங்கள் : இந்த பூமி தோன்றி பல லட்சம் ஆண்டுகளாகிவிட்டன. முதலில் காற்று மண்டலமாயிருந்து படிப்படியாக தற்போதைய நிலைக்கு வந்தது. இதற்கிடையில் பலப்பல காலங்களில் ஏராளமான வால் நட்சத்திரங்கள் இந்தப் பூமியில் விழுந்து சிதறிப் போனதால் – அவைகளின் மூலப் பொருளாயிருந்த பல உலோகங்கள் – இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி, தங்கம் போன்றவை பூமிக்கடியிலும், கடலுக்கடியிலும் புதைந்தன, மழை, வெப்பம், காற்று போன்றவற்றால் இவை இயற்பியல், வேதியியல் மாற்றமடைந்தன, அந்த உலோகச் சத்து தாவரங்களில் மட்டுமல்ல நமது உடலிலும் கலந்தன. இந்தப் பூமியிலுள்ள தனிமங்கள் அத்தனையும் நம் உடம்பிலும் உள்ளன என்று இன்றைய விஞ்ஞானம் சொல்கிறது. இவைகளை நமக்குத் தந்த வால் நட்சத்திரங்கள் சுயமாக தோன்றியவை!

ஜோதி (3) சூரியன் : நமக்கு அருகில் (9 1/2 கோடி மைல் தூரத்தில்) உள்ள இந்த சூரியனை மையமாக வைத்தே நமது பூமி சுற்றி வருகிறது, பயிர்களும், உயிர்களும் வாழ சூரியனின் பங்களிப்பு மற்றெல்லாவற்றையும் விட மிக மிக அதிகம். இதுவும் சுயமாக தோன்றியதே!

ஜோதி 4 ஜோதி 5 ஜோதி6 பரம்
என்றால் சந்திரன் (4), மின்னல் (5), நெருப்பு (6)

ஆகியவை உயிர்கள் தோன்றக் காரணமாயின.

ஜோதி (4) சந்திரன் : அருட்பெருஞ்ஜோதி அகவலில் 513 முதல் 544 வரிகள் வரை – பூமி, சந்திரன், சூரியன் இவை அகம், நடு, புறம் என்றும் ஒவ்வொன்றினுள்ளும் அகம் நடு புறம் ஆக 9 நிலைகள் சொல்லப்பட்டு அவைகளின் அசைவு, மோதல், இணைப்பு போன்றவைகளால் முதல் செல் தோற்றுவிக்கப்பட்டது, அதற்கு அகநடுவில் வெளிவந்த கடல் நீர் உப்பும் ஆதாரமாயிருந்தது. அண்மையில் வெளிவந்த MOON'S ROLL IN CREATING

LIFE ON EARTH என்ற ஆங்கிலப் புத்தகம் இதை ஆமோதிக்கிறது.

ஜோதி (5) மின்னல்! : நமக்கு மழை தேவை, ஆனால் அதனுடன் வரும் மின்னல், இடி சேதம் விளைவிக்கிறது. இயற்கை ஏன் இவைகளை உருவாக்கியது? தாவரம் வளர குறிப்பாக நைட்ரேட் (No. 4) தேவை. பூமியிலிருந்த அதை உறிஞ்சி அவை வளர்கின்றன. இந்தச் சத்து பூமியில் காலியாகி விடுகிறது. மழை பொழியும் போது இடி, மின்னலால் பல ஆயிரம் வோல்ட் மின்சக்தி உற்பத்தியாகி நைட்ரஜனை பிரித்து ஆக்ஸிஜனுடன் சேர்த்து நைட்ரேட்டை உருவாக்கி பூமிக்கு அனுப்புகிறது. நம் வீட்டு பயிர்கட்கு வேண்டுமானால் நாம் செயற்கை உரம் தயாரித்துப் போடலாம். காடுமலைகளில் உள்ள பயிர்கட்கு இத்தனை ஆண்டு காலமாய் இந்த சத்தை மின்னல்தான் தருகிறது.

ஜோதி (6) நெருப்பு : இது CARBO HYDRATE / HYDRO CARBON போன்ற உணவுப் பொருளாகவும், எரிபொருளாகவும் இருக்கிறது. இது அண்டத்தில் காணப்பட்டாலும் நமது பிண்டத்திலும் தங்கி வாழவைக்க, உடல் வெப்பம், சுத்த அசுத்த உஷ்ணத்திற்கும் காரணமானது.

ஆக இந்த 6 ஜோதிகளும் அண்டத்தில் பிரபஞ்சத்தில் நின்று ஜீவராசிகளை உண்டாக்கி, உணவளித்து, உய்வித்து வருகிறது என்பதைத்தான் வள்ளலார்.

மன ஆதிகள் – மனம், புத்தி, சித்தம் போன்றவைகட்கு, பொருந்தா – இதைப் பற்றிய சிந்தனைகள் எட்டியும், எட்டாமலும் இருந்தபோதிலும், வான் நடுவானாய் – நட்சத்திரங்களாய், வால் நட்சத்திரங்களாய், சூரியனாய், சந்திரனாய், மின்னலாய், அனாதி உண்மையதாய் – சுயமாகத் தோன்றி, நிலைத்தும் நிற்கக்கூடியதாய், அமர்ந்த மெய்ப்பொருளே – இயற்கை உண்மையாம் கடவுளே. இயற்கை விளக்கமாம் கடவுளே, இயற்கை இன்பமாம் கடவுளே என்கிறார். அண்டத்தை இப்படி விளக்கும் வள்ளலார் பிண்டமாம் ஊன் உயிரை எப்படி விளக்குகிறார் எனக் கேள்வி எழும் என்பதால்...

தானொரு தானாய் தானே தானாய் ஊன் உயிர் விளக்கும் ஒருதனிப்பொருளே என அகவலில் அடுத்த வரியிலேயே (899/900) எழுதுகிறார்.

ஜோதி7 ஜோதி8 ஜோதி9 அருள் :

என்றால் மூலாதார(த்தில் மூண்டெழு கனல்) குண்டலினி (ஜோதி 7), ஜீவஒளி (ஜோதி 8), சிரநடு சிற்றம்பல ஒளி (ஜோதி 9) ஆகியவை உடம்பை அருளாக மாற்றும் வல்லமை பெற்றவை! எப்படிஎனில் துன்னும் அனாதியே சூழ்ந்து எனைப் பிரியாது என் உறவாகிய என் உயிர் உறவே அகவல் 1199/1200. துன்னும் என்றால் தொடரும் – சேரும் எனப் பொருள். எனவே பல்லாயிரம் பிறவிகள் நான் எடுத்து வந்தபோதிலும் என்னை அந்த அனாதியான இறைவன் எல்லாப் பிறவிகளிலும் சூழ்ந்து என்னைப் பிரியாது என் உயிருக்கு (உடம்புக்கு அல்ல) உறவாகி இருந்தானே அது எதற்காக எனில் – மேற்சொன்ன மூன்று ஜோதிகளைக் கொண்டு – கரணப் பெருந்திறலால், என்னுளே விளங்கி என்னுளே பழுத்த ஒழுக்கங்களால், உயிர் இரக்கத்தால் ஆணிப் பொன்னம்பல அருட்காட்சி கண்டு, அந்த சுவாசம் அப்பாலே போகாமல் பந்தாடி, கைவிடமாட்டானென்று நம்பி, தோலெலாம் குழைந்து,

பொன்னுருவாகி, இன்ப வடிவம் பெற்று, அருளுடம்பாக்கி காற்றிலே கரையச் செய்யும் பொருட்டாம்.

ஜோதி10 ஜோதி11 ஜோதி12 சிவம் :

என்றால் இடது கண், வலது கண், புருவமத்திக்கு பின்னால் உள்ள அகக்கண்ணால் கையறவிலாத கண்புருவப் பூட்டை கண்டு, களி கொண்டு காற்றிலே கரைந்த உடலில் இருந்த ஆன்மாவை வெளிக் கொண்டு வருதலே (உடலை அருள் பெறச் செய்தபின்) அகத்திலிருந்த ஆன்மாவை அனகத்தில் சேர்த்தலே – அனைத்து அணுக்களிலும் கலத்தலே EMBODIMENT – சிவமாதல் என்பதாம், எனவே

இந்தப் பிரபஞ்சம் – மெய்யான சுயஞ்ஜோதி
நமது காயம் – மெய்யாகத் தகுந்த அருள் ஜோதி
நமது ஆன்மா – மெய்யாகத் தகுந்த சிவஜோதி

மேற்சொன்ன அகவல் 899/900 காட்டுவதும் தான் (I) தானாய் (HE) ஆக வேண்டுமானால் எனது ஊன் (உடம்பு) இந்திரிய, கரண, ஜீவ ஒழுக்கத்துடன், காருண்யத்துடன் வாழத் தலைப்பட்டால் தடையேதுமின்றி அதுவாகவே அருளாக வழி செய்து கொண்டு (தானேதானாய்) அதில் இது காறும் உறைந்த உயிர் சிவமாதல் சாத்தியமே என விளக்கும் ஒரு தனிப்பொருள் எனது மெய்ப்பொருள் என்பதேயாம்!

ஆக இயற்கை உண்மையாம் கடவுளே, இயற்கை விளக்கமாம் கடவுளே, இயற்கை இன்பமாம் கடவுளே என வள்ளலார் சொன்னது எப்படி எனில் இயற்கைதான் உண்மையானது, இயற்கைதான் விளக்கமளிக்கும், இயற்கைதான் இன்பம் தரும் என்கின்ற உண்மை விளங்கினால் இன்பம்!

**கே.என். உமாபதி**
கைபேசி : 95518 49757

---

# தீபநெறி

## நன்றி! நன்றி!! நன்றி!!!

இந்த இதழுடன் தீபநெறி மாத இதழ் தனது 8-ம் ஆண்டை நிறைவு பெறுகிறது. தீபநெறி வாசகர்களுக்கும், வாரி வழங்கும் கொடை வள்ளல்களுக்கும், சன்மார்க்க பெருங்குணத்தவர்களுக்கும், ஜீவகாருண்ய தயவாளர்களுக்கும் தீபம் அறக்கட்டளை கோடான கோடி நன்றியினை தெரிவித்துக்கொண்டு தங்களின் மேலான பேராதரவை அன்புடன் எதிர்நோக்கும்...

இங்ஙனம்
**ஆசிரியர் குழுவினர்கள்**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

**திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா**

## 16. சுத்த மெய்ஞ்ஞான சுகவெளி

31. சுத்தமெய்ஞ் ஞான சுகோதய வெளியெனும்
32. அத்துவிதச்சபை அருட்பெருஞ் ஜோதி

(உ–வி) அகண்ட பிரபஞ்சவெளி அளவிடற்கரியதாய்ப் புறத்தே சூழ்ந்துள்ளது. அந்தப் பெருவெளியின் உண்மை விளக்கத்தை உள்ளவாறு அறிய வேண்டுமானால், நமது அகமாகிய ஆன்மாகாச அருட்பெருவெளியில் இருந்து, சுத்த மெய்யறிவால் தான் காண வேண்டும். இந்த அகவெளியே சுத்த சன்மார்கத் தனிவெளி எனவும், சுகவெளி எனவும், முன் குறிக்கப்பட்டது. இவ்வெளியில் தான் வளரொளியாக நம் அருட்பெருஞ்ஜோதியின் அனுபவம் வெளிப்பட உள்ளதாம். இது சுத்த சன்மார்க்கம் தோன்றுமிடமாம். ஆகப் பெருவெளியெலாம் நிரம்பி நித்தியமாய் விளங்கும் கடவுளை, அதன் உண்மை விளக்கம் அறியப்படுகின்ற இந்த அக வெளியில் நின்று அனுபவ பூர்வமாக அடைய வேண்டியிருக்கின்றதாம்.

புறத்திருந்து சென்று ஒடுங்கிப் போகும் பழைய சன்மார்க்கங்கள் போன்றல்லாது மெய்ஞ்ஞான விசாரத்தால் சுத்த மெய்ஞ்ஞான நிலையத்திருந்து அல்லது சத்திய ஞான சபையிலிருந்து வாழச் செய்வது இந்த சுத்த சன்மார்க்கம். திருஅம்பலவன் திருநோக்கம் பெற்றார்க்கு உரு அம்பல்ததே என்று உணர்த்தப் பெறுகின்றோம். இந்த அம்பலவாணன், அம்பல அன்பன் தான் அருளின்பானுபவத்தை அறிந்து நுகரத் தொடங்குகின்றான். ஆகையால் இந்த அக அருள்வெளி சகோதய வெளியாக உரைக்கப் பெறுகின்றது.

அருளாலே அருளிறை அருள்கின்ற பொழுதங்கு
அனுபவமாவது என்னடி தாயே,
தெருளாலே மருளாலே தெரியாது தெரியும்
திருவடி இன்பமென் றறியடி மகளே,

என்ற பரவிளக்கத்தால் தெளிவுறும் உண்மை இதுவாகும். அருட்பெருஞ் ஜோதி ஆனந்தப்பதி இந்த அகவெளியில் அருள் ஞானத்தால் அறியப்பட அறியப்பட உள்ளிருந்து, இது வரை அனுபவித்தறியாத பேரின்பம் வெளியாகிப் பெருகுகின்றதாம். இதனால் இந்த அருள்வெளி சுகோதயவெளி உண்மையே.

அருட்பெருஞ்ஜோதியோ உதயாத்தமனமின்றி, தோன்றுதலும் மறைதலும் இல்லாது எக்காலும் அக சுத்த ஞானாகாச வெளியில் திகழ்ந்து நின்று பேரின்பமயமாய் விளங்குகின்றது. இப்படியுள்ள பதியே தான் இந்த அருளின்பானுபவம் வெளிப்படக் கொண்டு உலக வாழ்வில் விளங்கற்கு வேண்டி, இந்த மெய்ஞ்ஞான மனிதவடிவினனாகத் தோன்றியுள்ளதாம். அந்த அருட்பதியும் இந்த மெய்ஞ்ஞானியும் வேறல்ல ஒருவரே என்பது உண்மை, இவ்வுண்மைதான் அக ஆன்ம சிற்றணுவில், அத்துவித சிற்சபையில்

அனுபவப்படுகின்ற அருட்பெருஞ்ஜோதியாம். இந்த மெய்ஞ்ஞானி எந்த அளவுக்கு உடற்பற்று நீங்கி, அருள் அனுபவம் பெறுகின்றானோ அந்த அளவுக்குச் சுகவாழ்வில் ஓங்குகின்றவனாகின்றான். பூரண நிலையில், சகத்தின் உச்சமுற்றவனாய், சுத்த சுகானந்த வடிவினனாய் என்றும் திகழ்வான்.

முக்கியக் குறிப்பு : அகண்டமானது கடவுள் பேருருவம். அவ்வகண்டத்தில் ஒரு சிற்றணுவைத் "தன்" சிற்றுருவாய்க் கொண்டு அதில் தன் சச்சிதானந்த அனுபவத்தை ஏற்றுள்ளது கடவுள் மனிதனின் அல்லது சுத்தசன்மார்க்கியின் நிலையாம். அணுத்துவமாகிய கடவுள் சித்துரு அல்லது சிற்றுருதான் சிற்றம்பலம், சிற்சபை, ஆன்ம அணு எனப்படுகின்றதாம். இந்தச் சிற்றுருவைச் சூழ உள்ள இறைபேருருவம் தான் பேரம்பலம். பொன்னம்பலம் எனவும் கூறப்படும்.

---

# வருந்துகின்றோம்...







**புலவர். இளந்தேவன்**

சினிமா பாடல் ஆசிரியரும், மறைந்த தமிழக முதல்வர்கள் திரு. எம்.ஜி.ஆர். மற்றும் செல்வி. ஜெ. ஜெயலலிதா ஆகியோரின் உதவியாளரும், நமது தீபநெறி இதழின் ஆசிரியருமான கவியரசர்- **இலக்கிய செம்மல் புலவர். இளந்தேவன்** அவர்கள் 11.07.2017 (செவ்வாய் கிழமை) அன்று இரவு 7.31 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னாரது பிரிவால் வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கு தீபம் அறக்கட்டளை தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொண்டு அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடம் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
**அறங்காவலர்கள்-நிர்வாகிகள்**
**தீபநெறி ஆசிரியர்கள்**
**தீபம் அறக்கட்டளை**

# உலகெங்கும் வடலூராக வேண்டும்...

**பஞ்சம் என்பதே இல்லா நிலையை பாரதம் பெற வேண்டும்.**




**தலைமையகம் : சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில்**
**தினசரி நூற்றுக்கணக்கானோர்களுக்கு பசியாற்றுவிக்கப்படும் அற்புத காட்சி.**




**சென்னை வேளச்சேரி நடமாடும் நித்ய அன்ன தருமச்சாலை மூலம்**
**தினசரி நூற்றுக்கணக்கானோர்களுக்கு பசியாற்றுவிக்கப்படும் அற்புத காட்சி.**

**காற்றினில் குணம்பல கணம்பல வணம்பல**
**ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி (474)**

## தீபம் அறக்கட்டளையின் நித்ய தருமச்சாலைகள்...




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில், சோழிங்கநல்லூர் நடமாடும் தருமச்சாலை மூலம் பசியாற்றுவிக்கும் தயவு. வேல்முருகன் அய்யா.




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்
கல்குட்டை தருமச்சாலை பசியாற்றுவிக்கப்படும் அற்புதக்காட்சி.

காற்றிடைச் சத்திகள் கணக்கில உலப்பில
ஆற்றவும் அமைத்த அருட்பெருஞ்ஜோதி (476)

## தீபம் அறக்கட்டளையின் நித்ய தருமச்சாலைகள்...




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
திண்டிவனம் - பாண்டிச்சேரி சாலை, கொஞ்சிமங்கலம் தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. கமலக்கண்ணன் - 9565202659 / 7502753019.




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
திண்டிவனம் - பாண்டிச்சேரி சாலை, கேணிப்பட்டு தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. கமலக்கண்ணன் - 9565202659 / 7502753019.

# தீபம் அறக்கட்டளையின் நித்ய தருமச்சாலைகள்...




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
வேலூர் மாவட்டம், இருங்கூர் தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. விக்னேஷ்வரன் – 7708551551 / 9943699566




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் கெங்கவரம் தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. இரவிச்சந்திரன்ஹரி – 8940992294.

காற்றிடை உயிர்பல கதிபல கலைபல
ஆற்றலின் அமைத்த அருட்பெருஞ்ஜோதி (480)

# தீபம் அறக்கட்டளையின் நித்ய தருமச்சாலைகள்...




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம் தேவதானம்பேட்டை தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. அண்ணாமலை அய்யா – 8056156776 / 9840932776.




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
திருவாரூர் மாவட்டம், பேரளம் வட்டம், மாங்குடி தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. அழகர் இராமனுஜம் – 9790885685.

# தீபம் அறக்கட்டளையின் நித்ய தருமச்சாலைகள்...




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
திருவாரூர் மாவட்டம், திருவீழிமிழலை தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. மகாலிங்கம் – 9524581103.




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
திருவாரூர் மாவட்டம், கோனேரி இராஜபுரம், சிவனாகரம் தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. காமராஜ் – 9488049521 / 9095123835.

# தீபம் அறக்கட்டளையின் நித்ய தருமச்சாலைகள்...




**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,**
**தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், சக்ராபடித்துறை தருமச்சாலை**
**பொறுப்பாளர் : தயவு. மாரிமுத்து - 9894609564.**




**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,**
**தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், சுவாமிமலை தருமச்சாலை**
**பொறுப்பாளர் : தயவு. இராமநடராஜன் - 9944534355.**

**காற்றிடைச் செயல் எலாம் கருதியபயன் எலாம்**
**ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (486)**

# தீபம் அறக்கட்டளையின் நித்ய தருமச்சாலைகள்...




சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. கார்த்திக் மற்றும் டில்லிபாபு – 9994904706 / 9003580376.





சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில்,
தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், கோவிந்தக்குடி தருமச்சாலை
பொறுப்பாளர் : தயவு. கண்மணி – 9524503335.

காற்றினில் பக்குவக் கதியெலாம் விளைவித்து
ஆற்றலின் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (488)

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தருமச்சாலை திறப்பு விழாவில் (08.07.2017) அன்னதானம் நடந்த அற்புதக்காட்சிகள்...













காற்றினில் காலம் கருதுறு வகைஎலாம்
ஆற்றவும் வகுத்த அருட்பெருஞ்ஜோதி (490)

## தருமம் - தொண்டு

தருமமிகு சென்னை என்றார் வள்ளலார். தருமத்தின் திருவுருவான வள்ளலார் அப்போதைய சென்னையை தருமமிக்கதாகக் கண்டிருக்கிறாரெனில், ஒரு நூற்றைம்பது ஆண்டுகளுக்குள் தர்மம் நிலைகுலைவை சந்தித்துக் கொண்டிருக்கிறதே ஏன்?

தர்மமே வடிவான வள்ளலார் தர்மத்தை மட்டுமே கண்டிருப்பார். அந்த அருளாளரிடமிருந்து வெளிப்பட்ட "தயை" எனும் கதிர்வீச்சு, சுற்றியிருப்போரை தருமமிக்கவர்களாக ஆக்கியிருக்கக் கூடும். தர்மம் மட்டுமே அவரால் உணரப்பட்டிருக்கக் கூடும்.

சரி! தர்மத்தின் இலக்கணம் தான் என்ன?
தர்மம் நிலைகுலைந்துள்ளது என்ற நினைப்பே தவறா??

சிந்திப்போம். யுகத்திற்கு யுகம் தர்மங்கள் வேறுபடும் என்று பண்டிதர்கள் சமாதானமும் – சாமர்த்திய விளக்கங்களும் தருகிறார்கள். நான்கு யுகங்களின் பெயர் குறிப்பிட்டு, ஒவ்வொரு யுகத்தின் கால அளவையும் துல்லியமாக நிர்ணயித்துள்ளார்கள்.

எந்த யுகத்தின் தர்மத்தை நாம் சிந்திப்பது? எந்த மதத்தின் தர்மத்தை போற்றுவது? எந்த இனத்தின் தர்மத்தை ஆய்வு செய்வது? மனித இனம் ஒன்றுதானே! மனித இனம் ஒரே மாதிரியான தர்மத்தைப் பின்பற்றுவதுதானே நியாயம்?

கலிகாலத்தில் என்ன செய்வது என்று பெருமூச்சு விடுவோருக்கு ஒரு செய்தி, கலி முடிந்துவிட்டது. இப்போது துவங்கியிருப்பது சத்யயுகம். சத்தியத்தை தேட வேண்டிய நிர்பந்தத்தில் இருக்கிறோமே அதுதான் வேதனை. யுகங்கள் போதித்த தர்மங்களை வினாவாக ஒரு முறை திரும்பிப் பார்ப்போமா?

இதிகாசங்களிலே பழைமையானது இராமாயணம். இற்றைக்கு சுமார் 16,000 ஆண்டுகட்கு முன்பு தசரத இராமனின் காலம் என சில வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு, கைகேயி கேட்ட வரங்கள், வாலி வதம், சீதையை சந்தேகித்து கானகம் அனுப்புதல் இவைகளெல்லாம் அறத்தின் நாயகனின் வரலாற்றுக் காவியத்தில் காணப்படும் நிகழ்வுகள், இன்றும் திரைப்படங்களாக எடுக்கப்பட்டு பக்தியோடு பார்த்து பரவசப்பட்டுக் கொண்டிருக்கிறோம். எட்டாயிரம் ஆண்டுகட்கு முன்பாக நிகழ்ந்ததாக வரலாற்று ஆசிரியர்களால் கணிக்கப்பட்டுள்ள மகாபாரதம், தர்மத்தைக் காப்பதற்கென்றே, தர்மத்தை நிலைநாட்டுவதற்கென்றே அவதரித்து, வாழ்ந்து, போரிட்டு, பதினெட்டு அக்ரோணி சேனைகளையும் அழித்து போர்க்களத்தில் புனித நூலான கீதையைப் போதித்த கிருஷ்ண பகவானை கொண்டாடுதற்கென்றே, அவர் உரைத்த கீதா தர்மத்தை பரப்புதற்கென்றே ஒரு இயக்கமே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

வியாசர் பிறப்பு – பீஷ்மர் பிறப்பு, சந்தனு – சத்யவதி திருமணம், பீஷ்மர் சபதம், திருதராஷ்டிரர், பாண்டு பிறப்பு, பாண்டவர்களின் பிறப்பு, துரோணாசாரியர் ஏகலைவனிடம் கேட்ட குருதட்சணை, தர்மபுத்திரன் ஆடிய சூதாட்டம், தேயம் இழந்தது, தன்னை இழந்தது,

தாரத்தையே இழந்திடத் துணிந்தது, போரில் நிகழ்த்தப்பட்ட இராஜதந்திரங்கள், கர்ணனின் இன்னுயிர் பறிக்கத் தீட்டப்பட்ட திட்டங்கள் என அடுக்கிக் கொண்டே போகலாம். இவைகளெல்லாம் அப்போதைய யுக தர்மங்கள் போலும்.

நாத்திகவாடை என அவசரப்பட்டு தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். யுகத்திற்கு யுகம் தர்மங்கள் எப்படியெல்லாம் மாறின, ஏற்றுக் கொள்ளப்பட்டன என்கிற வியப்பை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். மஹாவீரர் பரப்பிய சமணம், போதிசத்வர் போதித்த அட்டாங்க விதிகள், மோஸஸ் பெற்ற பத்துக் கட்டளைகள், இயேசுபிரான் ஆற்றிய மலைப்பிரசங்கம், நபிகள் நாயகம் ஸல் தெய்வக்குரலை உள்வாங்கி உரைத்திட்ட தர்ம நியதிகள் என பூவுலகம் எங்கனும் தர்மங்களின் போதனைகள் காலாகாலமாகத் தொடர்வது மட்டுமல்ல, அளவில்லாமல் அள்ளி வழங்குப்படுகின்றதேயன்றி, மனிதனை மாமனிதனாக்கிடத் தேவையானவை இவைகள் தான் என்பதில் ஒருமித்த உணர்வோ, ஒருங்கிணைத்திடும் முயற்சியோ ஒன்றே குலம் – ஒருவனே தேவன் எனும் தத்துவத்தில் உறுதிப்பாடோ, எம்மதமும் சம்மதம், அடைக்குந்தாழில்லாத அன்புதான் ஆண்டவன் என்று மாந்தர் அனைவரும் உறதியுடன் ஒன்றிணையாதது கொடுமை மட்டுமல்ல வேதனைக்குரிய ஏமாற்றம்.

இலக்கியங்களும் தர்மங்களை வற்புறுத்தின. வழிகாட்டின. நீதி கேட்டு வந்த கண்ணகியின் சீற்றமிகு சொற்களை செவிமடுத்த பாண்டியன் நெடுஞ்செழியன், யானோ அரசன் – யானே கள்வன் என அக்கணமே உயிர் துறந்து ஓர் தர்மத்தை நமக்கு வழங்கினான்.

அன்னம் பாலிப்பு தான் தலையாய தர்மம் என உணர்த்திய மணிமேகலையில் "ஆபுத்திரன் கை அமுதசுரபி" நினைவிருக்கிறதா?

திருவள்ளுவர்தான் தர்மத்திற்கு, தெளிவான இலக்கணத்தை எளிதாக உள்வாங்கக்கூடிய வகையில் சொன்னார்.

அழுக்காறு அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் தான் தர்மம் என்றான் பாரதி.
அன்பும் – பணிவும், சினம் தவிர்த்தலுமே தர்மம் என்றார் வள்ளலார்.

இத்தனை நூற்றாண்டுகளாக, இவ்வளவு தர்ம போதனைகளையும் உள்வாங்கிய இந்த சமுதாயம் எத்தகு தர்ம சிந்தனையோடு வாழ்கிறது???

குற்றவாளிகளைக் கும்பிடும் ஒரு கூட்டம், தர்மயுத்தம் நடத்துகிறோம் என ஒரு கூட்டம், தர்மத்திற்கே ஒரு புது அர்த்தத்தை கொடுக்க முயல்வதையும் வேதனையோடு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது இந்த சமுதாயம்.

தர்மம் பற்றி மிக மிக விரிவாக சிந்தித்தோம். தொண்டு பற்றியும் கொஞ்சம் தெரிந்து கொள்வோமா? தொண்டாற்றுபவர்கள் தொண்டர்களெனின் எத்தகைய தொண்டு? என

அறிய முனைவது நல்லதல்லவா? பிறர் துன்பம் துடைப்பது தொண்டாகுமா? பிறர் குறிப்பறிந்து இடுக்கண் களைவது தொண்டாகுமா? என் கடன் பணி செய்து கிடப்பதே என்றாரே அப்பர். இதையே சற்று விரிவாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்த சமுதாயத்திற்கு நாம் பட்ட கடனை, திருப்பி செலுத்திக் கொண்டே இருப்பதுதான், இறுதிவரை சலிப்பில்லாமல் செலுத்திக் கொண்டே இருப்பது தான் தொண்டு. தொண்டின் சிறப்பு தெரிந்து கொள்ள ஔவையாரின் ஒரு பாடலின் சான்றே போதுமானது.

பெரிது பெரிது புவனம் பெரிது என துவங்கிய ஔவையார் தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என முடித்தார். பெரிதினும் பெரிதாக ஔவையாராலேயே போற்றப்பட்ட தொண்டர்களின் புனிதத் திருநாமம், நாம் காணும் இன்றைய தொண்டர்கட்கு பொருந்துமா? இவர்களும் தங்களைத் தொண்டர்கள் என அழைத்துக் கொள்கிறார்களே வியப்பாக இல்லையா? இல்லை. இதில் வியப்பேதும் இல்லை. தொண்டு தன் பொலிவிழந்து, தனது பொதுநல பண்பிழந்து, பிறர்க்கெனவே வாழ்கின்ற பேராண்மை இழந்து, தலைவா!!! எனத் தனிமனிதத் துதி பாடி ஆர்ப்பரிப்பதும், குற்றவாளிகளைக் கும்பிடுவதற்கென்றே குழு அமைத்துக் கொண்டாடி மகிழும் இன்றைய தொண்டர் தம் பெருமையைப் பேசிடவே நா கூசுகிறது,

ஔவை காட்டிய தொண்டர்கள் காணாமல் போய்விட்டார்களோ?? அவர்கள் இன்னமும் இருக்கிறார்கள், எப்போதும் இருப்பர், இது திண்ணம். புறநானூறு சொல்வதைச் சற்று கேளுங்கள். “உண்டாலம்ம” எனத் துவங்கும் புறநானூற்றுப் பாடல். ஔவை சுட்டிய தொண்டர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் இன்னமும் இயங்கிக் கொண்டிருக்கிறது என உறுதிபட சொல்கிறது. எத்தகு தொண்டர்கள்? தமியர் உண்டாலும் இலர் – சான்றோர் அஞ்சுபவைகட்கு தாமும் அஞ்சுவர் – புகழெனின் உயிரையும் கொடுப்பர் – பழியெனின் உலகொடு பெறினும் வேண்டலர். இத்தகு தொண்டர்கள் இன்றும் இருப்பது என்னவோ உண்மைதான். அவர்கள் எண்ணிக்கை கூட வேண்டுமே, என்பதுதான் நமது ஏக்கம். எனது கற்பனைச் சிறகு சில கணங்கள் கனவுலகில் மிதந்தன. பிறனில் விழையாத, பிறிதின் நோய் தன்நோயாக உணரும் தன்மையராக, பிரதிபலனே எதிர்பாராத தொண்டர்களாக இன்றைய தொண்டர்கள் மாறுவார்களேயானால்!!! தமிழகம் எப்படி மாறும் எனக் கனவு கண்டேன். கண்கள் பனித்தன. உள்ளம் சிலிர்த்தது. இது சாத்தியமில்லை, வெறுங் கனவு என்று மட்டும் எண்ணிவிடாதீர்கள். (முயல்+ஆமை) முயலாமை கதை நாம் யாவரும் அறிந்ததே. முயல் ஏன் தோற்றது, ஆணவத்தால். ஆமை எப்படி வென்றது, தளரா செயற்திறனால் வென்றது.

தீபத்தின் தளராத தொண்டுகளால் தர்மம் மிகும். தர்மம் எங்கும் நிறையும். ஆருயிர்க்கெல்லாம் அன்பு செய்தல் தான் அறம். தர்மம் பிரதிபலனே எதிர்பாராத பணிகள் தான் தொண்டு. எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளத்தே உவக்கின்றார் யாரோ அவர்தான் தொண்டர். அவர் ஆற்றிடும் தொண்டுதான் தர்மம்.

**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை – 08056438488

# அன்னதானப் பணியில் ஆன்மநேய சாதுக்கள்...













சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் அதிகாலையில்
அன்னதான சேவைப்பணியில் சாதுக்களும் மற்றும் ஆடுகின்ற சேவடிகளும்.

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 10 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான பசியால் வாடும் வறியவர்களுக்கு, 17 தருமச்சாலைகள் மூலம்**

# அன்னம் பாலிப்பு




**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற வாருங்கள்!**

**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 17 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ. 17, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 1,70,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும்:**

**94440 73635 / 2244 2515**

Donations may be sent by crossed cheque to :

**Deepam Trust**

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**

**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**

**வெளியிடைக் கருநிலை விரிநிலை அருநிலை**
**அளிகொள வகுத்த அருட்பெருஞ்ஜோதி (500)**

# பசித்தோர் முகத்தை பாராதிருந்தேனோ...!









சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் வயிற்றுப்பிணியாகிய பசிப்பிணியை போக்க
தினந்தோறும் பசியாற வருகைத் தரும் முதியவர்கள்...

RNI : TNTAM/2010/35284 R.No.TN/CC(S)Dn/412/17-19

"REGISTERED" LICENSED TO POST WITHOUT PREPAYMENT
UNDER WPP NO.TN/PMG/(CCR) / WPP-290/2017-2019
Posted at Patrika Channel, Egmore, Chennai - 8. | Date of Publication : 20th of Every Month

சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலை வளாகத்தில் நடந்த பசியாற்றுவிக்கப்படும் அற்புதகாட்சி.



To
Shri / Smt / Dr

Posted at Patrika Channel
Posted on 27-7-2017
Egmore, Chennai - 8

If undelivered Please Return to :

# DEEPAM TRUST

(REDG. No. - 2035/07)

No. 30, Drowapathi Amman Koil Street (Next to Mosque), Velachery, Chennai - 600 042. Phone : 044 - 2244 2515
Cell : 94440 73635 | E-mail : admin@deepamtrust.in | Web : www.deepamtrust.org

Published by : M. Balakrishnan on behalf of Deepam Trust,
No.30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042 and
Printed by RK. Shekaar at Sree Offset Printer, No. 840, Anna Salai, Saidapet, Chennai - 600 015.
Editor : M. Balakrishnan